சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் திங்கள்கிழமை

இடைமனு எண்.2/2024

இன்

அசல் வழக்கு எண்.51/2011

....

AL. லெட்சுமணன் செட்டியார் ...மனுதாரர்/பிரதிவாதி

**/எதிர்/**

சந்திரபோஸ் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 18.08.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.N.மகேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.அழகப்பன் அவர்கள் ஆஜராகியும் , இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையையும் காலதாமதமாக தாக்கல் செய்யும் காலதாழ்வை மன்னித்து மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையையும் ஏற்றுக்கொண்டு தாவா மனுவினை அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரருக்கு தாவா வழக்கினை பொறுத்து மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்கு கூடுதல் சட்ட கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்ற சட்ட

அறிவுரையும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே மனுதாரர் தரப்பு ஆட்சேபணைகளை கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி தாவா மனு தாக்கல் செய்யப்படுகின்றது. மேலும் தெரிவித்துள்ள சங்கதிகள் அடிப்படையிலே சாட்சியங்கள் நிரூபணம் செய்ய முடியும் என்பதும் சங்கதிகள் இல்லாத சாட்சியமும் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதும் சட்ட கோட்பாடாகும். மேலும் மனுதாரரால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்கு விரோத மன்னியில் இந்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படுகிறது. எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையையும் காலதாமதமாக தாக்கல் செய்யும் கால தாழ்வை மன்னித்து மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி மனுவினை ஏற்று உத்தரவிட வேண்டும்.

### 3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

அசல் வழக்கை தாக்கல் செய்து 13 ஆண்டுகள் கழித்து கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளக்கோரி பின்யோசனையாய் Belated ஆக கால தாமதத்திற்கு எவ்வித முகாந்திரமுமின்றி இம்மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையுடன் அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யக்கூடிய எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எதிர்மனுதாரருக்கு கிடைக்கவிடாமல் தாமதப்படுத்தும் நோக்கத்தில் தாவா மனு பொய்யான சங்கதிகளைக் கண்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் கூற்றுப்படி 26.09.2011-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து 6 ஆண்டுகள் கழித்து 05.09.2017-ல் வழக்கானது வாதியின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்படும் வரை ஏன் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு எவ்வித முகாந்திரத்தையும் மனுதாரர் தெரிவிக்கவில்லை.

20.10.1997, 11.10.2003, 11.11.2008 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தமும், மறு கிரைய ஒப்பந்தம் மற்றும் சம்மத பத்திரம் ஆகியவை உபய வாதிகளுக்கு இடையில் ஏற்பட்டது என்பதை மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவற்றில் கண்டுள்ள சரத்துக்களுக்கு விரோதமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. 20.02.2004-ம் தேதியன்று

எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பிலேயே கூடுதல் எதிர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை கூறியிருப்பதாக தெரிவித்துள்ள மனுதாரர் பின்னர் அதனை இந்நீதிமன்றத்தில் 26.09.2011-ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ஏன் தெரிவிக்கவில்லை என்பதற்கு எவ்வித முகாந்திரத்தையும் மனுவில் தெரிவிக்கவில்லை. கிரைய உடன்படிக்கை அமுலில் இருந்து வரும் நிலையில் 19.12.2005-ம் தேதியன்று தன் மகன் நாராயணனுக்கு இனாம்சாசனம் எழுதி கொடுக்க எவ்வித உரிமையும் மனுதாரருக்கு சட்டப்படி கிடையாது. எனவே மேற்படி நாராயணன் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் ஆக மாட்டார்.

Readiness and willingness பற்றி எதிர்வழக்குரைக்கு முற்றிலும் மாறான தகவலை கூடுதல் எதிர்வழக்குரையில் மனுதாரர் தெரிவித்திருப்பதால் மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை சட்டப்படி ஏற்க இயலாது. எனவே 13 ஆண்டுகள் கழித்து எவ்வித தகுந்த முகாந்திரமுமின்றி, ஆவணமுமின்றி வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தோடு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்த மனுவை தாக்கல் செய்துள்ள மனுதாரர் தனது இரு மகன்களையும் தூண்டிவிட்டு சிபிசி ஆர்டர் 1 விதி 10(2)ன் கீழ் party impleading மனுக்களை தாக்கல் செய்ய வைத்திருப்பதால் மனுதாரருக்கு இம்மனுவை தாக்கல் செய்வதில் Bonafide intention எதுவும் கிடையாது. பிரிவினையில்லாத 43 ஏக்கர் 22 .1/2 செண்டுக்கு மட்டும் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே மேற்படி மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையையும் காலதாமதமாக தாக்கல் செய்யும் கால தாழ்வை மன்னித்து மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையையும் ஏற்றுக்கொள்ளக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபணை செய்து எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை தாக்கல் செய்து 13 ஆண்டுகள் கழித்து கூடுதல் எதிர்வழக்குரையை பின் யோசனையுடன் பொய்யான சங்கதிகளைக்கண்டு

தாக்கல் செய்துள்ளதாகவும், 20.10.1997, 11.10.2003, 11.11.2008 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தமும், மறு கிரைய ஒப்பந்தம் மற்றும் சம்மத பத்திரம் ஆகியவை உபய வாதிகளுக்கு இடையில் ஏற்பட்டது என்பதை மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவற்றில் கண்டுள்ள சரத்துக்களுக்கு விரோதமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. மேலும் 20.02.2004-ல் அனுப்பப்பட்ட பதில் சட்ட அறிவிப்பில் கூடுதல் எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை கூறியிருப்பதாக மனுதாரர் தெரிவித்திருந்தும் அதனை 26.09.2011 எதிர்வழக்குரையில் சொல்லிடாமல் தற்போது கூடுதல் எதிர்வழக்குரை மூலமாக சொல்லிடுவது ஏற்புடையது அல்ல எனவும் மனுதாரர் தனது இரு மகன்களையும் தூண்டிவிட்டு மனுக்களை தாக்கல் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**7.** அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்திருந்தாலும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதால் அதன் சங்கதி குறித்து சாட்சியம் அளித்திட மனுதாரரால் முடியும். இதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். அசல் வழக்கானது இருதரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு வழங்கிய பின்பு தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் மனுவை அனுமதித்தால் தான் அவரது வழக்கினை அவரால் நிரூபணம் செய்ய இயலும் என்ற சங்கதியையும், வழக்கின் சங்கதிகளையும் கருத்தில் கொண்டு அசல்வழக்கு ஏற்றதை ஆற்றுக பரிகார வழக்காக இருப்பதாலும் கூடுதல் வழக்குரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக கருதி தாவா மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக தாவா மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.09.15 17:29:59 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.09.15 17:30:06 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court,
Sivagangai
I.A.No.2/2024 in
O.S.No.51/2011
**Draft/Fair/Order**
15.09.2025